பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 05 திங்கட்கிழமை 18.03.2024 கதிர் 132

### வெடுக்குநாறிமலை விவகாரத்தில்

# நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்க தமிழ் காங்கிரஸ் எம்.பிக்கள் தயார்

### முன்னணி செயலாளர் கஜேந்திரன் அறிவிப்பு

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி அன்று பொலிஸார் மேற்கொண்ட அடாவடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தயார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னனியின் செயலாளர் செ.கஜேந்திரன் அறிவித்திருக்கிறார்.

வெடுக்குநாறியில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யகோரி☞ 2

## இது ரகசியம் அல்ல!

இது தேர்தல் காலம் என்பதால் கருத்துக்கணிப்புக்களுக்குப் பஞ்சம் கிடையாது. பல ஊடகங்களும் பொது அமைப்புக்களும் இத்தகைய கருத்துக் கணிப்புக்களை நடத்தி முடிவுகளை வெளியிடுகின்றன. அவற்றில் எல்லாக் கருத்துக் கணிப்புக்களும் நம்பகத்தன்மை வாய்ந்தனவாக இருப்பதில்லை. வெகு சில மட்டுமே உண்மைக்கு மிக நெருக்கமாக இருக்கின்றன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யார் வெல்வார்கள் என்பது தொடர்பில் இதுவரையில் பல கருத்துக்கணிப்புக்கள் வெளியாகி இருக்கின்றன. அதில் பெரும்பாலானவை ஜேவிபி தலைவர் அனுரகுமார வெற்றிபெறுவார் என்று தெரிவித்து வந்தன. இந்த நிலையில் இப்போது ஒரு கருத்துக்கணிப்பு வெளியாகி இருக்கின்றது. ☞ 2

## விண்ணப்ப திகதி நீடிப்பு

பல்வேறு பொருளாதாரச்சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலில் ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் 2024/2025 திட்டத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது ஏப்ரல் 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கல்விப் புலமைப்பரிசில் 2024/2025 திட்டத்திற்கான☞ 2

## வெப்பக் காலநிலை சில நாள்கள் நீடிக்கும்

நிலவும் வெப்பமான வானிலை அடுத்த சில நாட்களில் மேலும் அதிகரிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நாட்டின் சில பகுதிகளில் மாலை வேளையில் மழைபெய்யக்கூடும் என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க குறிப்பிட்டார்.

ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சூரியன் உச்சம் கொடுப்பதால், வெப்பநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என அதுல கருணாநாயக்க கூறினார்.

நேற்றுக் காலை 8.30 உடன்☞ 2

## வெடுக்குநாறிச் சம்பவத்தைக் கண்டித்து திருகோணமலையில் நேற்று போராட்டம்

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி நிகழ்வுகளைப் பொலிஸார் குழப்பியதைக் கண்டித்தும் அங்கு கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரியும் திருகோணமலை சிவன் கோயிலடிக்கு முன்னால் நேற்றுமாலை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம் பெற்றது.

சமூக செயற்பாட்டாளர்கள் இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

மார்ச் சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி மலைசிவன் ஆலயத்தில் வழிபாட்டின் போது கைது செய்யப்பட்ட எண்மரை விடுதலை செய்யுங்கள் எனவும் வழிபாடு எமது அடிப்படை உரிமை ஆதி சிவன் ஆலயம் எமது பூர்வீகம், ஈழத்தின் சமயத் தலைவர்களை அபகரிக்காதே தொல்பொருள் எனும் போர்வையில் பௌத்தத்தை விதைக்காதே, வழிபாட்டை தடுக்கும் உரிமையை காவல் துறையினருக்கு கொடுத்தது யார், ஆலய நிர்வாகிகளை உடனடியாக விடுதலை செய், ஆலயங்கள் சைவத் தமிழர்களின் பூர்வீக அடையாளம் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்தப்போராட்டத்தில் நூற்றுக்கும் அதி☞ 2

## போதைப் பொருளை ஒழிக்க வடக்கில் ஒத்துழைப்பு அவசியம்

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அழைப்பு



வடக்கில் போதைப் பொருள்களை ஒழிக்கவும் பாதாள உலகக்குழுக்களை ஒழிக்கவும் மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்☞ 2

## தென் மாகாணத்தில் இன்று முதல் பொலிஸ் விசேட சுற்றிவளைப்பு

தென் மாகாணத்தை மையமாகக் கொண்டு இன்று முதல் விசேட சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட வுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

அதிகபட்ச பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி இந்தச் சுற்றிவளைப்புகள் நடத்தப்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தென் மாகாணத்தில் அதிகரித்துள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த விசேட சுற்றிவளைப்பு இடம்பெறவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

## குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் இருவர் சிஐடியினரால கைது

### பாதாள உலகக் குழுவினருக்கு போலி கடவுச் சீட்டு வழங்கினராம்

பாதாள உலக குழுவைச் சேர்ந்தவர்களுக்குப் போலியான கடவுச்சீட்டு தயாரித்தார்கள் என்ற சந்தேகத்தில் குடிவரவு- குடியகல்வு திணைக்கள பிரதிக் கட்டுப்பாட்டாளரும் முன்னாள் கட்டுப்பாட்டாளரும் நேற்று மாலை குற்றப் புலனாய்வு பிரிவினரால் (சிஐடி) கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பலைச் சேர்ந்த இருவருக்கு போலிக் கடவுச்சீட்டு தயாரித்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பில் குற்றப் புலனாய்வுத்திணைக்கள பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரோஹன☞ 8

## போதைப் பொருளை 40 வருடங்களாக முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை

### யாழ்ப்பாணத்தில் பொலிஸ் மா அதிபர் சுட்டிக்காட்டு



போதைஒருமுடிவுக்குக் கொண்டுவரமுடிந்தாலும்

போதைப் பொருட்களை கடந்த 40 வருடங்களாக ஒழிக்க முடியவில்லை என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்த தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற பொலிஸ் பிரஜைகள் குழுவுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## இந்திய மீனவர்கள் 21 பேர் நேற்றும் கைது

எல்லை தாண்டி வந்து இலங்கை கடற்பரப்பினுள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தியா, இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 21 மீனவர்கள் 2 படகுகளுடன் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் நீரியல்வள திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நீரியல்வள திணைக்களத்தினர்☞ 2

## மட்டக்களப்பில் யானைகள் தாக்கி இருவர் உயிரிழப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பற்று பிரதேச செயலகப் பிரிவு ஈரளக்குளத்தில் சனிக்கிழமை இரவும், கிரான் பிரதேச செயலக பிரிவு திகிலிவெட்டையில் ஞாயிறு அதிகாலையிலும் யானைகள் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இரு வெவ்வேறு பிரதேச செயலகப்பிரிவுகளிலும் நடைபெற்ற இறப்புக்கள் தொடர்பான விசாரணைகளை, திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளான எம்.எஸ்.எம்.நஸீர், ☞ 2

## பஸில் ராஜபக்ச இலங்கைக்கு விடுமுறைச் சுற்றுலா வந்தவர்

### இப்படி விமர்சிக்கிறார் மனோ கணேசன்

பஸில் ராஜபக்ச இலங்கைக்கு விடுமுறையில் சுற்றுலா வந்துள்ளார் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொது ஜன பெரமுனவினரின் வரவுசெலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவே நாம் வாக்களித்தோம். ☞ 2

## எந்தத் தேர்தலையும் பிற்போட இடமளிக்கப்படவே கூடாது

### முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கிராமத்தில் நடைபெறும் கூட்டுறவு சங்கத் தேர்தல் முதல் எந்தத் தேர்தலையும் பிற்போடுவதற்கு இடமளிக்கக் கூடாது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அம்பலாங்கொடையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் எப்போது என்று நான் கேட்கவில்லை. எந்தத் தேர்தல்☞ 8

# தொடருந்து மோதியதில் வவுனியாவில் ஒருவர் சாவு

வவுனியாவில் தொடருந்து மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் என்றுவவுனியாபொலிசார்தெரிவித் துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அனுராமபுரம்நோக்கிச்நேற்றுமாலை சென்றகடுகதிதொடருந்துவவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் பயணித்த போதுதண்டவாளத்திற்குள்நுழைந்த ஒருவரை மோதித் தள்ளியது.

இதில்வவுனியா, தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய ஜெயக்கொடி ஆராச்சி ராஜரட்ண என்பவர் உயிரிழந்தார். சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

100

## இனி இது .....

பெரும்பாலும் புலனாய்வு அமைப்புகள் மற்றும் தூதரகங்கள் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கருத்துக் கணிப்பு நிறுவனங்கள், தேர்தல் முடிவுகள் குறித்து சில கணிப்புகளைச் செய்து முடிவுகளை அறிவிப்பதும் வழக்கம். சில நிறுவனங்களைப் போன்று 100 முதல் 200 பேருக்கு தொலைபேசி அழைப்புகள் செய்து இத்தகைய கருத்துக் கணிப்புக்கள் நடத்தப்படுவதில்லை, மாறாக மாகாணங்கள், மாவட்டங்கள், நகரங்கள், பாலினம், சிறு, முதியோர், இளைஞர்கள், வேலைகள் என அனைத்துக் குழுக்களையும் உள்ளடக்கும் வகையில் 5000 பேருக்கு மேல் மாதிரி தேர்வு செய்யப்பட்டு கருத்துக் கணிப்பு நடத்தப்படுகின்றது.

இவ்வாறுபொறுப்புடன்சர்வதேச அமைப்பு ஒன்று நடத்திய விசேட கருத்துக்கணிப்பின் தகவல்களையே இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளவுள்ளேன். கடந்த வாரம்தான் அந்த முடிவுகளின் சாராம்சம் வெளியாகி இருந்தது. ஆளும் தரப்பின் உயரிய இடங்களுக்கு மட்டுமன்றி, தூதரகங்கள் மற்றும் எதிர்கட்சியின் சில அரசியல்வாதிகளுக்கும் இந்தத் தகவல் சென்றடைந்ததைக் காண முடிந்தது. கருத்துக்கணிப்பின் உத்தியோகபூர்வமுடிவுகள்இன்னும் வெளியாகவில்லை.

இந்தக் கருத்துக் கணிப்பின்படி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் சஜித் பிரேமதாச 39% வாக்குகளையும், ஜனதா விமுக்தி பெரமுன தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கிட்டத்தட்ட 20% வாக்குகளையும் பெறும் என்பது மிகத் தெளிவாகத் தெரியவந்துள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் மக்களின் ஆணையைப் பெற்ற மொட்டுக் கட்சி இத்தேர்தலில் 9 வீதத்தையே பெறும் என்றும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதான ஐக்கிய தேசியக் கட்சியின் 5 வீதத்தையே பெறுவார் என்றும் மேலும் பல வேட்பாளர்கள் சுமார் 1 வாக்குகளைப் பெறுவார்கள் என்றும் கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது. இது தவிர, 24% வாக்காளர்கள் தாங்கள் யாருக்கு வாக்களிப்போம் என்பது குறித்து இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என்பதும், எந்த வேட்பாளரும் இதுவரை 50% மதிப்பெண்ணைத் தாண்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்துக் கணிப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கத் தவிர்த்தே நடத்தப்பட்டுள்ளது. வடக்கின் வாக்குகளை விட்டுவிட்டு, கிழக்கு மாகாணத்தைப் பற்றி பேசினால், அங்கு ரவூப் ஹக்கீமும், ரிஷாத் பதுர்தீனும் தற்போது சஜித்துடன் உள்ளனர். எனவே அங்கும் சஜித்துக்கு கணிசமான வாக்குகள் கிடைக்கும் என்று எதர்பார்க்கப்படுகின்றது. எனவே இதுவரையில் எந்தவொருவரும் ஜனாதிபதித் தேர்தலை வெல்லுவதற்கான வாய்ப்புகள் தெட்டத்தெளிவாகத்தெரியவில்லை. குழப்பகரமான நிலையே நிலவுகின்றது. தேர்தலே நடக்குமா என்கிற கேள்வியே பெரிதாக இருக்கும் நிலையில், வெற்றியை பற்றி எங்கு சிந்திப்பது என்கிற கருத்தும்கூட உண்டு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நாடாளுமன்றத்தைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்குமாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்புகோரியிருந்தது. அதற்குப் பதலளிக்கும் வகையிலேயே கஜேந்திரன் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயநிர்வாகிகளைப்பார்வையிடட் பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது கஜேந்திரன் இதனை அறிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களுக்கு எதிராக புதிது புதிதாகச் சட்டங்கள் இயற்றப்பட்டு கைது செய்யப்படுகின்ற நிலைமையே காணப்படுகிறது. இதுவே வெடுக்குநாறி விடயத்திலும் நடந்தது. பொய் குற்றச்சாட்டுக்களை போட்டு அவர்களை இன்று சிறை வைத்திருக்கிறார்கள்.

ஆலய நிர்வாகிகள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக உள்ளது. ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்கின்ற ஒரு அமைப்பு தமிழ் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்கின்ற ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள்.

எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடும் கட்சி உறுப்பினர்களோடும் இது தொர்பாகக் கலந்துரையாடியதன் பிரகாரம் அந்தக் கோரிக்கையை ஆதரிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னனி பூரண முழுவை வழங்குவதாக ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பிடம் தெரிவித்து இருக்கின்றோம்.

இதுதொடர்பில்ஆறுதிருமுருகன் அவர்களோடும், அகத்தியார் அடிகளாருடனும் பேசி அந்த முடிவுக்கு நாங்கள் சம்மதம் தெரிவித்து இருக்கிறோம். எனினும் மார்ச் 19, 20 ஆம் திகதிகளில் சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வருகின்றது. 20ஆம் திகதி வாக்கெடுப்பு இடம்பெற இருக்கின்றது.

இந்த அமர்வுகளுக்குச் செல்லாமல் புறக்கணித்தால் விவாதத்திலும் கலந்துகொள்ள முடியாமல் போகும். எதிர்த்து வாக்களிக்க முடியாத நிலைமையும் உருவாகும். இதுதொடர்பில் ஒருங்கிணைந்ததமிழர்கட்டமைப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

அதற்கும்அப்பால்ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்கும், இலங்கையில்இன அழிப்பு இடம்பெற்றதனை மூடி மறைப்பதற்கும், இலங்கையைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்றுவதாகக் கூறி சர்வதேச நாணய நிதியத்துக்காக அரசோடு ஒட்டியதுடன், அரசோடு பேச்சு என தெரிவித்து இதற்கு முன்பு செயற்பட்ட அமைப்புக்கள், இன்று வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகிகளின் விடுதலை பற்றி ஜனாதிபதியோடு பேசுகிறது. அந்தச் சந்திப்பு அவர்களது விடுதலையை சாத்தியமாக்குமாக இருந்தால் அது தொடர்பாக நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கப் போவதில்லை. இவர்களது விடுதலைக்கு யார் முயற்சிஎடுத்தாலும்நாங்கள்அதற்கு தடையாகஇருக்கப்போவதுமில்லை என தெரிவித்தார்.

(100)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்று நடைபெற்ற பொலிஸ் பிரஜைகள் குழுவுடனான சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

நாங்கள்யுக்தியநடவடிக்கையைத் தொடங்கிய காலம் முதல் மிகவும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தே முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருளை ஒழிப்பதற்காகவும், பாதாளக் குழுக்களைஒழிப்பதற்காகவும்நான் கடுமையானதீர்மானங்களைஎடுத்துச் செயற்படுவேன். அதற்கு உங்களது முழுமையானஒத்துழைப்பு தேவை.

எமக்கு தகவல்களை வழங்குகின்றபோது எந்தவிதமான அரசியல் ஒத்துழைப்புக்கும் அடிபணியானது நான் செயற்படுவேன் என்று உறுதியளிக்கின்றேன் - என்றார்.

## விண்ணப்ப...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விண்ணப்பங்களைஏற்றுக்கொள்வது தொடர்பாகபலரின்வேண்டுகோளுக்கு இணங்க இந்தக் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பு அறிவித்துள்ளது.

ஜனாதிபதிகல்விப்புலமைப்பரிசில் திட்டம்தொடர்பில்அனைத்துவலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாகவும் சகலஅதிபர்கள், பிரதேசசெயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்குதகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளபெற்றோர்கள்உரிய விசாரணைகளை மேற்கொண்டு விண்ணப்பப்படிவத்தை பாடசாலை அதிபரிடம்கையளிக்குமாறுஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது.

மேலும், கல்வி அமைச்சின் செயலாளரினால் ஏற்கனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த பாடசாலைக்கு எத்தனை புலமைப்பரிசில்கள் வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் பிராந்திய கல்விப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டு வலயத்திலுள்ள அதிபர்களுக்குஅறிவிக்கநடவடிக்கை எடுக்கப்படும்.

அதன்படி, அனைத்துப் பாடசாலைகளிலும் அதிபர்கள் தேர்வுக் குழுவைநியமித்து, 01.04.2024க்குப் பிறகு தங்கள் பாடசாலைக்குக் கிடைக்கும் புலமைப் பரிசில்களின் அளவுக்கேற்ப புலமைப்பரிசில் பெறுவோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பாடசாலைகளால் தெரிவு செய்யப்படும்தகுதியானபுலமைப்பரிசில் பெறுவோரின் பட்டியல், விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை கல்விஅமைச்சுஜனாதிபதிநிதியத்திற்கு அனுப்பிய பின்னர், இந்தப் புலமைப் பரிசில் தொகைகள் 2024 ஏப்ரல் முதல் அடுத்த 12 மாதங்களுக்கு வழங்கப்படும்.

இலங்கையிலுள்ள 10,126 பாடசாலைகளை உள்ளடக்கி, முதலாம் தரம் முதல் 11ம் தரம் வரை கல்விகற்கும்ஒரு இலட்சம் (100,000) மாணவர்களுக்கான இந்த கல்வி உதவித்திட்டத்தைநடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், முழுத் திட்டத்திற்கும் ஜனாதிபதி நிதியத்தினால் 360 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டபுலமைப்பரிசில் தகுதியாளர்களுக்குஅதுபற்றிஅறிவித்த பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர்தனது கூட்டுக் கணக்கொன்றை இலங்கை வங்கி, மக்கள் வங்கி அல்லது தேசிய சேமிப்புவங்கிக்கிளையில்ஆரம்பிக்க வேண்டும். குறித்த வைப்புத்தொகை உரியவகையில்குறித்தவங்கியினால் மாணவரின் கணக்கில் வைப்புச் செய்யப்படும்.

அதன்படி, புலமைப் பரிசில் பெறுவோர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அதிபரினால் புலமைப்பரிசில் பெற்றவர்கள் பற்றிய தகவல்களை உள்ளடக்கிவங்கிமுகாமையாளருக்கு கடிதமொன்றை வழங்குவார். உதவித்தொகை பெறத் தகுதியான மாணவர் தனது தாய் ஃ தந்தை ஃ பாதுகாவலருடன் அந்தந்த வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களைச் சந்தித்து அறிவுறுத்தலின்படி வங்கிக் கணக்கைத் திறந்து வங்கிக் கணக்கு தொடர்பான தகவல்களை அதிபரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல்பக்கமான www.facebook.cof/president.fund மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு எதிராக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளதோடு இன்று மன்றில் முன்னிலைப்படுத்துவதற்குநடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கே.பவளகேசன்ஆகியோர்கரடியனாறு மற்றும் சந்திவெளி பொலிஸாருடன் சம்பவ இடத்திற்கு நேரடியாக சென்று மேற்கொண்டனர்.

ஆவெட்டியாவெளியில் மாடு வளர்ப்பில் ஈடுபட்ட, சித்தாண்டியை சேர்ந்தஇருபிள்ளைகளின்தந்தையான பத்மநாதன் மோகனதாஸ் (45) என்பவர் சனிக்கிழமை மாலை தொடருந்தில்மோதுண்டார். உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்றுவிட்டு பண்ணையை நோக்கி இரவு 9 மணியளவில்நடந்துசெல்லும்போது ஈரளக்குளத்தில் வீதியோரமாக நின்ற யானையொன்றினால் தாக்குண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

திகிலிவெட்டை, குளத்துவெட்டையை சேர்ந்த நாகராசா முரளிதரன் (31) என்ற ஒரு பிள்ளையின் தந்தை மரத்தின் கீழ் தூங்கிக் கொண்டிருந்தபோது யானை மிதித்து உயிரழந்தார். நண்பர் ஒருவருடன் நள்ளிரவு வேளை வலைவீசிமீன்பிடிக்கச்சென்றுவிட்டு ஞாயிறு அதிகாலை வேளை குளத்தின் ஓரமாக நின்ற மதுரை மரத்தின் கீழ் படுத்துறங்கிய போது யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இரு சடலங்களும் உடற்கூற்று பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுபிரேதபரிசோதனையின் பின்னர்சடலங்கள்உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு ஹெரோயின் போதைப்பொருள் கொண்டுவரப்பட்டுநாற்பதுவருடங்களாகிறது. பொலிஸார் பல கைதுகளை மேற்கொண்டாலும்அதனைமுடிவுக்கு கொண்டுவர முடியவில்லை.

போர்கூடமுப்பதுவருடங்களாகிய பின்னர் முடிவுக்கு வந்தது. ஆனால், போதைப்பொருள்விடயத்தைமுடிவுக்கு கொண்டுவர முடியவில்லை. அதற்கு முற்றுப்புள்ளிவைப்பதற்காகவேயுக்திய செயற்பாடுமுன்னெடுக்கப்படுகின்றது என்றார்

இங்கு தமிழில் உரையாற்றிய அவர்,

உங்களைச்சந்திக்ககிடைத்ததில் மகிழ்ச்சி, இரண்டு வருடங்கள் வன்னிக்குப்பொறுப்பாகஇருந்தேன். அப்போது வன்னிப்பிரதேசத்தில் இன, மத ஒற்றுமைக்காக நிறைய செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தேன்.

தற்போது போதைப்பொருள் ஒழிப்புக்காக யுக்தியசெயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. அதற்காக உங்களின் ஒத்துழைப்பை கோரி நிற்கின்றேன். உங்களால்வழங்கப்பட்டு வருகின்ற ஒத்துழைப்புக்கு மிக்க நன்றிகள் - என்றார்.

## வெடுக்குநாறிச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கமானவர்கள் கலந்துகொண்டனர்.

இதுவேளை, வெடுக்குநாறி மலையில் சிவராத்திரி நாளில் இடம்பெற்றஅடக்குமுறைகள்கண்டிக்கத்தக்கன என அகத்தியார் அடிகளார் தென்காயிலைஆதினம்தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று மாலை செய்தியாளர்களிடம் அவர் இதனைத்தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்நாங்கள்வழிபாட்டில் ஈடுபடும் போது இவ்வாறான விடயங்களை மேற்கொள்வது நல்லதல்ல .இந்த நாட்டிற்கு ஒரு சமுதாயத்திற்கு பல்லின சமூகம் வாழும் இந்த நாட்டில் இது ஏற்றதல்ல .இறைவனை வழிபடும் போது அடக்குமுறையானநிகழ்வுகைவத்திற்கு மட்டுமல்ல முழு சமூகத்திற்கும் ஏற்க முடியாது - என்றார்.

## வெப்பக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவடைந்த24மணித்தியாலங்களில் குருநாகல் பகுதியிலேயே அதிகூடிய வெப்பநிலை பதிவாகியுள்ளது. 38.3 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. கொழும்பில் 33.9 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இதேவேளை, சித்திரை புத்தாண்டிற்குப் பின்னர் பாடசாலைகளில்விளையாட்டுபோட்டிகளை ஏற்பாடுசெய்யுமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக அவ்வாறான போட்டி நிகழ்ச்சிகளை சில வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும், இந்த ஆலோசனைகளை சில பாடசாலைகள் மீறுவதை ஊடகங்கள் வழியாக தாம் அறிகிறார் எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## பஸில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெகலியரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேஷ்ணைக்கு ஆதரவாக வாக்களித்தோம். அதேபோன்று தான் சபாநாயகர் விடயத்திலும் செயற்படுவோம். பொது ஜன பெரமுனவே அவரைக் காப்பாற்றுவதற்காகச் செயற்படவுள்ளது.

அதேநேரம், பஸில் ராஜபக்ச அமெரிக்காவிலிருந்து சுற்றுலா விடுமுறையில்இலங்கைக்குவருகை தந்துள்ளார். அவ்வாறு வருகை தந்தவர், ஜனாதிபதித்தேர்தலைநடத்தினால் தமக்குப் பாதகமான நிலைமைகள் ஏற்படும் என்பதால் நாடாளுமன்றத் தேர்தலைநடத்துமாறுகோருகின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் பொர முன இருபது ஆசனங்களையாவது பெற்றுக் கொள்ளும் என்று கருதுகின்றார். ஜனாதிபதி தேர்தலின் பின்னார் நாடாளுமன்றத்தேர்தல்நடத்தப்பட்டால் தமது கட்சிக்கு வெறுமனே இரண்டு மூன்றுஆசனங்கள்தான்கிடைக்கும் என்பதைஅவர்நன்குஉணர்ந்துள்ளார் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அடிப்படையில் தொடர்ந்தும் முஸ்லிம் அதிகாரிகளுக்கான தடை

## இம்ரான் எம்.பி கவலை



(கே.எ.ஹமீட்)

கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகளுக்கெதிரான விரோதப் போக்கு தொடர்ந்து வருகின்றது. கட்டங்கட்டமாக முஸ்லிம் அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு வருகின்றனர். நிலைமை இன்னும் நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாண சபையில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலை ஏற்படலாம் எனதிருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் இருந்த முஸ்லிம் அதிகாரிகள் ஆளுநரால் அகற்றப்பட்ட செய்தியை ஏற்கனவே நான் பகிரங்கப்படுத்தியிருந்தேன். அந்த வரிசையில் தற்போது இலங்கை கல்வி நிர்வாக சேவை மூத்த அதிகாரி ஒருவர் எவ்வித பதவியும் வழங்கப்படாது இடமாற்றப்பட்டிருக்கிறார்.

கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தில் இருக்கும் 5 அமைச்சுக்களில் இரண்டு தமிழ் செயலாளர்களும், இரண்டு முஸ்லிம் செயலாளர்களும், ஒரு சிங்கள செயலாளரும் பணியாற்றி வந்தனர். இந்த மாகாணத்தின் இனச் சமநிலையைக் கருத்தில் கொண்டு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தற்போது கிழக்கு மாகாணத்தில் எந்த ஓர் அமைச்சிலும் முஸ்லிம் செயலாளர்கள் இல்லை. முதலமைச்சு, சுகாதாரம், வீதி அபிவிருத்தி ஆகிய 3 அமைச்சுக்களிலும் தமிழ் செயலாளர்களும், கல்வி, விவசாயம் ஆகிய இரண்டு அமைச்சுக்களிலும் சிங்கள செயலாளர்களும் கடமை புரிகின்றனர். இது இந்த மாகாணத்தில் வாழ்கின்ற ஒட்டு மொத்த முஸ்லிம் சமுகத்தின் பிரதிநிதித்துவத்தையும் கொச்சைப்படுத்துகின்ற செயற்பாடாகும். எனினும், எந்த அரசியல் தலைமையும் இதனைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

இந்த வரிசையில் கிண்ணியா வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றிய சிரேஷ்ட கல்வி நிர்வாக சேவை அதிகாரியின் பதவி பறிக்கப்பட்டு எந்தவித பதவியும் வழங்கப்படாது அவர் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு உடன்செயற்படும் வண்ணம் இடமாற்றப்பட்டுள்ளார். அமைச்சு செயலாளர் பறிப்பு வரிசையில் இது மற்றுமொரு முஸ்லிம் பதவி பறிப்பு சம்பவமாகும். கிழக்கு மாகாணத்தில் சமீபகாலமாக அரங்கேற்றப்படும் முஸ்லிம் விரோதப் போக்குகளின் மற்றுமொரு சம்பவம் இதுவாகும். நிலைமை இப்படியே நீடிக்குமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அதிகாரிகள் எவரும் பணி புரிய முடியாத நிலைமை ஏற்படுத்தப்படலாம்.

ரணில் - ராஜபக்ஷ ஆட்சியில் முஸ்லிம் விரோதப் போக்கு இன்னும் தொடர்கின்றது என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாகும். எனவே. கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகம் விழித்தெழ வேண்டிய அவசர நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள் தொடர்பாகப் பேசுவார்கள் என்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது என்பது இவற்றின் மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

எனவே, முஸ்லிம் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், புத்தி ஜீவிகள், உலமாக்கள் என அனைவரும் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயங்கள் சமூக மயப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம் சமுகம் இந்த அநீதிகளுக்கெதிராக ஒன்றுபடவேண்டும். முஸ்லிம் அதிகாரிகள் பாதுகாக்கப்பட வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# ஏறாவூரில் முன்மாதிரி மகளிரை பாராட்டி ஊக்கமளிக்கும் நிகழ்வு

தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி முன்மாதிரியாகத் திகழும் மகளிரைப் பாராட்டி ஊக்கமளிக்கும் நிகழ்வு ஏறாவூர்ப்பற்று கலாசார மத்திய நிலையத்தில் வெள்ளியன்று இடம்பெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலக உதவிச் செயலாளர் நிருபா பிரிந்தன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் சிறந்த சுயதொழில் முயற்சியாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 4 பெண்களும், வறுமைக்குட்பட்ட சூழ்நிலையிலும் கல்வியைத் தொடர்ந்து மருத்துவ பீடத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவி ஒருவரும், ஏசியன் டெயூபோள் சர்வதேசப் போட்டியில் சர்வதேசமட்டத்தில் 3 ஆம் இடத்தைத் தனதாக்கிக் கொண்ட வீராங்கனை சங்கர் சக்சனா, ஈட்டி எறிதல் தேசிய மட்டப் போட்டியில் 13 ஆம் இடத்தைப் பெற்ற வீராங்கனை, மாவட்ட மட்டத்தில் சேமிப்பில் முதலாமிடம் பெற்ற மாவடிவெம்பு சமுர்த்தி வங்கி முகாமையாளர் உள்ளடங்கலாக 9 பெண்கள் சிறந்த முன்மாதிரி ஆற்றல் மிக்க மகளிர்களாக மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றிற்கு சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக சிறு கடை வியாபாரம் செய்வதற்கான பொருள்களும் 09 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா 10000 ரூபா விகிதம் சுழற்சி முறைக்கடன்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி தர்ஷினி சுந்தரராஜன், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலக கணக்காளர் டிலானி ரேவதன், நிர்வாக உத்தியோகத்தர் புஸ்பம் யேசுதாஸன் மாவட்ட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் அருணாளினி சந்திரசேகரம், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார், ஏறாவூர்ப்பற்று கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி டி.ஜகனிதா, முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ. நபீலா, மகளிர் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.எல். குறைஷா அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கிருஷாந்தினி மணிவண்ணன், பிரதீபா நெல்சன், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்களான நிறோஜினி விநாயகம், லதா ரவீந்திரராஜா உட்பட பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், மகளிர் சங்க உறுப்பினர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்தவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் நடனம், விழிப்புணர்வு நாடகம், பாடல் உட்பட கலை அம்சங்கள் இடம்பெற்றதுடன் நிகழ்வுகளில் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பினால் பரிசில்களும் வழங்கப்பட்டன.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் 2012ஆம் ஆண்டிலிருந்து கிழக்கு மாகாணத்தில் கூட்டுறவுத்துறை சார்ந்த திட்டங்களையும், பெண்கள் வலுவூட்டலோடு அபிவிருத்திகளை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சிகள், செயலமர்வுகள், விழிப்புணர்வுகள், தொழில்துறை உற்பத்திக் கண்காட்சிகள், கற்றல் கள விஜயங்கள், பொருளாதார வாழ்வாதார உதவு ஊக்கங்கள் என்பனவற்றை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆற்றில் நீராடிய இரு சிறுவர் பொல்வத்தவில் உயிரிழப்பு

காலி, யக்கலமுல்ல பிரதேசத்தில் பொல்வத்த ஆற்றில் நீராடிய சிறுவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் 11 மற்றும் 14 வயதுடைய சிறுவர்களாவர்.

இவர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) பகல் பொல்வத்த ஆற்றில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தத்திற்கு முகம்கொடுத்துள்ளனர். (05)

# 3 வெளிநாட்டுத் தூதுவர்கள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

சுவிட்ஸர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை திருகோணமலையில் உள்ள ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மரியாதை நிமித்தம் சனிக்கிழமை சந்தித்தனர்.

இதன்போது கிழக்கு மாகாணத்திற்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தாம் ஆதரவளிப்பதாகவும் தூதுவர்கள் தெரிவித்தனர்.

இதில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி .எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க உள்ளிட்டோரும் உடனிருந்தனர். (05)

# அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழ விற்பனை



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக கரையோர பகுதி பிரதான வீதியோரங்களில் வெள்ளரிப்பழம் விற்பனைசெய்யப்படுவதுடன் மக்களும் ஆர்வத்துடன் கொள்வனவு செய்து வருகின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை ,மருதமுனை , பாண்டிருப்பு ,நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு ,சம்மாந்துறை ,அக்கரைப்பற்று, பகுதிகளில் விற்பனை செய்யப்படுவதை காண முடிந்தது.

குறிப்பாக கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதியோரங்களில் மோட்டார் சைக்கிள், ஓட்டோக்களில் வெள்ளரிப்பழத்தை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

மாவட்டத்தில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள உடல் உஸ்ணத்தைத் தடுக்கும் பொருட்டு வெள்ளரிப்பழம் சாப்பிடுவதில் மக்கள் அதிக நாட்டம் கொண்டு வருகின்றனர்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளரிப்பழத்திற்கு சிறந்த கிராக்கி ஏற்பட்டுள்ளதுடன் , 300 ரூபா முதல் சுமார் 1000 ரூபா வரை இந்த வெள்ளரிப்பழம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வகை பழம் பெரும்பாலும் வெப்பமான காலங்களிலேயே அதிகமாக விளைச்சலாகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது .பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் பெருமளவில் செய்கை பண்ணப்பட்டுவருவதுடன், ஏனைய ஊர்களுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றது.

இதே வேளை கல்முனை- அக்கரைப்பற்று பிரதான வீதிகளில் இளநீர் ,தோடை ,குளிர்பானம் செய்யும் விற்பனை நிலையங்கள் அதிகமாக காணப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உயிர்த்த ஞாயிறு நீதி

இன்னும் மூன்று நாள்களில் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்து 5 வருடங்கள் நிறைவடையவுள்ளது. 3–0 வருட காலம் நீடித்த இனப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கையை பெருமளவில் உலுக்கிய இந்தச் சம்பவம் இலகுவில் மறக்கப்படக்கூடியதல்ல. அதேநேரம் அந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்தவர்கள், அல்லது அந்தத் தாக்குதல்கள் நடப்பதற்கான காரண கர்த்தாக்கள் மற்றும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தத் தவறியவர்கள் எவரும் இந்த 5 வருட காலத்தில் தண்டிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரையில் நீதி கிடைக்கவில்லை என்று பேராயர் கர்த்தினால் மல்க்கம் ரஞ்சித் அண்மையில்கூடத் தெரிவித்திருக்கிறார். எனினும் அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகள் எவரும் அது குறித்து அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால், யாழ்ப்பாணம் வந்திருந்த காவல் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற மற்றொரு தாக்குதல் மீண்டும் நடக்க இடமளிக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். தாக்குதலுக்கான மூலக் காரணத்தைக் கண்டறிந்து அதனை ஊக்குவித்தவர்களுக்கான தண்டனை வழங்கப்படடாத வரையில் மற்றொரு தாக்குதலை எப்படித் தடுக்க முடியும் என்கிற கேள்வி எழுகின்றது.

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கள், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு தரப்பினரை அதிகாரத்தில் இருத்துவதற்கான பின்னணியோடுதான் நடத்தப்பட்டது என்கிற ஐயம் தொடர்ந்து நிலவுகின்றது. இதற்கான தெளிவான பதிலை ஆட்சியாளர்கள் எவரும் இதுவரையில் வழங்கவில்லை. இது தொடர்பில் விசாரிக்கவென நியமிக்கப்பட்ட அரசுத் தலைவர் ஆணைக்குழுக்களின் அறிக்கையும் முழுமையாகப் பகிரங்கப்படுத்தப்படவில்லை. தம்மிடம் கையளிக்கப்பட்ட அறிக்கையில்கூட 1500 பக்கங்களைக் காணவில்லை என்று கர்தினால் மல்க்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டியுள்ளார். அதிலும் முக்கியமாக இந்தக் குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரி எனச் சொல்லப்படும் ஷஹ்ரானின் மனைவியின் வாக்குமூலங்கள் பேராயரிடம் இருந்து மறைக்கப்பட்டுள்ளன.

குண்டுதாரிகள் குறித்த மிக முக்கிய தகவல்களையும் அவர்களோடு தொடர்பில் இருந்தவர்கள் குறித்த தகவல்களையும்வெளிப்படுத்தக்கூடியஅந்தவாக்குமூலம் நீக்கப்பட்டிருப்பது தொடர்ந்தும் பல ஐயங்களையும் தாக்குதலின்பின்னணியில் இருக்கும்அரசியல் குறித்த கேள்விகளையும் எழுப்பிக்கொண்டே இருக்கின்றன. அவற்றுக்குப் பதில்வழங்கவேண்டியவர்கள் அதிலிருந்து நழுவிச்செல்வதன் மூலம் தமது கடமை தவறுகிறார்கள். அதன் மூலம் குற்றங்களின் மூலங்களைத் தொடர்ந்தும் பாதுகாக்கவும் செய்கிறார்கள். அப்படியிருக்கும்போது இதுபோன்ற தவறுகள் மீண்டும் நடக்காது என்று எப்படி உத்தரவாதப்படுத்த முடியும்?

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புக்கள் 2019 சித்திரை 21 நிகழ்ந்தன. அதன் மூலம் ஆட்சி மாற்றம் மட்டும் நிகழவில்லை. அந்தத் தாக்குதல் முஸ்லிம் சகோதரர்கள் மீது நிகழ்த்திய தாக்கம் இன்றுவரைக்கும் எதிரொலித்துக்கொண்டே இருக்கின்றது. அத்தகைய ஒரு தாக்குதலைத் தூண்டியவர்களின் பின்னால் அரச புலனாய்வு அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள் என்கிற சந்தேகங்கள் தொடர்ந்து கிளப்பப்பட்டு வந்தாலும் அது குறித்து வெளிப்படையான நியாயமானவிசாரணைகள்நடத்தப்படவில்லை. பதிலாக குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளக்கூடியவர்கள் என்று கருத்தப்படும் அதிகாரிகள் தொடர்ந்து பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றார்கள். இப்படி நீதியும் நியாயமும் இந்த நாட்டில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுவரும் நிலையில் எதிர்காலம் எப்படிப் பாதுகாப்பாக இருக்க முடியும்?

# ரஷ்யாவின் அடுத்த இலக்கு மோல்டோவா? ஆட்சி கவிழ்ப்பு சதியும், பிரியும் திரான்ஸ்னிஸ்ட்ரியா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உக்ரேனுக்கு அருகே உள்ள சிறிய கிழக்கு ஐரோப்பிய நாடானா மோல்டோவா (Moldova) ஆக்கிரமிப்பு சிக்கலில் சிக்கிக் கொண்டுள்ளது என மேற்கத்தய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. தற்போது உக்ரேனுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வரும் நாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் பணியை ரஷ்யா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது எனவும் இந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யா தனது துருப்புக்களை மோல்டோவின் கிழக்கு எல்லைகளில் நீண்ட காலமாக நிறுத்தியுள் ளது. கிட்டத்தட்ட 1,500 இராணுவத்தினர் அங்கு நிலைகொண்டுள்ளனர். அவர்களைத் திரும்ப பெற வேண்டும் என மோல்டோவா வலியுறுத்தியுள்ளது. அதையடுத்து அங்கு கடந்த காலங்களில் ஒரு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

### அச்சுறுத்தலில் மோல்டோவா:

மோல்டோவா நாட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் பிரான்ஸ் வழங்கும் என ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் உறுதியளித்




துள்ளார். சிக்கலான இந்தப் பிரச்சனைகளின் பின்னர் மோல்டோவாவுக்கு அசைக்க முடியாத ஆரதவு வழங்க பிரான்ஸ் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

கடந்த மாதம் மோல்டோவா நாட்டின் ஜனாதிபதி மய்யா சாந்து (Maia Sandu) பிரான்ஸ் நாட்டுக்கு வருகைதந்திருந்தார். இருதலைவர்களும்பாதுகாப்பு அம்சங்கள்தொடர்பில்கலந்துரையாடியிருந்தார்கள். அச்சுறுத்தல் விடுக்கும் ரஷ்யாவை எதிர்க்க மோல்டோவா நாட்டுக்குத் தனது முழு ஆதரவு இருக்கும் என பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

### சோவியத் காலத்தில் மோல்டோவா:

மோல்டோவா குடியரசு (Republica Moldova) கிழக்கு ஐரோப்பாவில் நாடுகளால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இதன் மேற்கே ருமேனியாவும், வடக்கு, கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உக்ரேனும் அமைந்துள்ளன. 1812இல் இது ரஷ்சியப் பேரரசுடன் இணைக்கப்பட்டு, ரஷ்சியாவின்வீழ்ச்சியின்பின்னர் 1918இல் ருமேனியாவுடன் இணைக்கப்பட்டது.

ஆயினும் 1940 இல் சோவியத் ஆக்கிரமிப்பு மற்றும் இரண்டாம் உலகப் போர் ஆகியவற்றின் பின்னர் இந்நாடு சோவியத் ஒன்றியத்தின் கீழ் மோல்டோவா சோவியத் சோசலிசக் குடியரசு ஆகியது. பனிப்போர் முடிவில் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட போது ஓகஸ்ட் 27, 1991 இல் இந்நாடு முழுமையாக விடுதலை பெற்றது.

மோல்டோவா ஒரு நாடாளுமன்ற ஜனநாயக நாடாகும். நாட்டின் தலைவராக சனாதிபதியும் ஆட்சித் தலைவராக தலைமை அமைச்சரும் உள்ளனர்.

### மோல்டோவா ஆட்சி கவிழ்ப்பு சதி?

பெப்ரவரி 2023இல் மோல்டோவா ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான சதிப்புரட்சிக்கு ரஷ்யா ஆதரவு



தந்தது என மோல்டோவா ஜனாதிபதி மாய்யா சாந்து கூறியுள்ளார். ஐரோப்பாவுக்கு ஆதரவான நாட்டின் தலைமையை அகற்றுவதற்காக, அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்ற போர்வையில், நாசவேலை செய்பவர்களுடன் ரஷ்யா சதி செய்தது என அவர் கூறியுள்ளார்.

உக்ரைனுக்கும் ருமேனியாவுக்கும் இடையில் அமைந்துள்ள மோல்டோவாவில் 26 லட்சம் பேர் வசிக்கின்றனர். அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்குமோல்டோவாவிண்ணப்பித்திருந்தது.

ரஷ்யா, பெலாரஸ், சேர்பியா. மொன்டேனீக்ரோ முதலான நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டுப் பிரஜைகளைப் பயன்படுத்தி தனது திட்டத்தை அமுல்படுத்த ரஷ்யா திட்மிட்டமிடுகிறது என மோல்டோவாஜனாதிபதிமாய்யாசாந்துகூறியுள்ளார்.

### ஐரோப்பிய ஒன்றிய அந்தஸ்து அங்கீகாரம்:

உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகளை வேட்பாளராக 27 ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளும் அங்கீகரிக்கும் என்று 2022 டிசம்பரில்உறுதியளித்ததாகதகவல்கள்வெளியாகின.

ஐரோப்பிய ஒன்றிய வேட்பாளராக விண்ணப்பித்திருக்கும் உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகள் வேட்பாளராக தற்போது அங்கீகரிக்கப்படவுள்ளன.

நேட்டோவில் இணையக் கூடாது என்ற வலியுறுத்தலை ஏற்காததால் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தநிலையில் உக்ரைனுக்கு நிதி உதவி மற்றும் ஆயுத உதவி செய்து வரும் ஐரோப்பிய ஒன்றியம், அந்நாட்டை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம், உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே நேரடியாக இராணுவ உதவி செய்ய முடியும். எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது என்பது எளிதான காரியம் அல்ல. அதற்கான நடைமுறைகள் முடிந்து இறுதிக்கட்டத்தை அடைய பல ஆண்டு காலம் ஆகும்.

இந்த நிலையில், அந்நாட்டுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலில் வேட்பாளர் அந்தஸ்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது. அதேபோல் மோல்டோவா நாட்டுக்கும் வேட்பாளர் அந்தஸ்து வழங்கப்படுகிறது.

### பிரியும் திரான்ஸ்னிஸ்ட்ரியா :

திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இறையாண்மை பற்றிய அச்சங்கள் அதிகரித்து வரும் நிலைமைகள் காரணமாக ஐரோப்பிய ஒன்றியம் மோல்டோவாவிற்குஅதன்அங்கத்து வத்தை வழங்க முன்வந்துள்ளது. ஐரோப்பிய நாடாளு மன்றத்தின் முடிவில் அதிருப்தி அடைந்த மோல்டோவாவின் பிரிந்த பிராந்தியம், தற்போது பதிலடி கொடுக்க முடிவு செய்துள்ளது. திரான்ஸ்னிஸ்ட்ரியா (Transnistria) இப்போது ரஷ்யாவுடன் இணைவதாக அறிவித்துள்ளது.

நீண்டகாலமாகரஷ்யசார்புபிராந்தியமாகஇருந்து வருகிறது திரான்ஸ்னிஸ்ட்ரியா, இந்த நிலையில்




இப்போது மோல்டோவாவுக்கு ஐரோப்பிய அந்

தொடர்ச்சி 5 ம் பக்கம்...

# ரஷ்யாவின் அடுத்த இலக்கு மோல்டோவா?



4 ம் பக்கதொடர்ச்சி...

தஸ்துவழங்குவதால்இருபிராந்தியங்களுக்கும் இடையிலானபதற்றங்கள்மேலும்அதிகரிக்கும். மோல்டோவாவின் முக்கிய குறிக்கோள் திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தைமீண்டும் ஒரு நாட்டிற்குள் ஒருங்கிணைப்பதாகும்.

**ரஷ்யாவின் பூரண ஆதரவு;**

திரான்ஸ்னிஸ்ட்ரியாவின் இந்த முடிவு ரஷ்யா வால் முழு மனதுடன் வரவேற்கப்பட்டுள்ளது. ரஷ்ய கூட்டமைப்பின் மாநில அவை, அங்கீகரிக்கப்படாத திரான்ஸ்னிஸ்ட்ரியா ரஷ்யாவின் ஒரு பகுதியாக மாறுவதற்கான விருப்பத்தை தீவிரமாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது.

அத்துடன், ரஷ்யாவில் சேரவிரும்பிய முன்மொழிவு தொலைதூர எதிர்காலம் பற்றியதும், எதிர்காலத்தில் ஒரு வழிகாட்டும் திசையாகும். எங்களுக்கு நெருக்கமான ரஷ்ய மொழிபேசும்மக்கள்அங்குவசிப்பதால், இந்த திட்டத்தை நாங்கள் தீவிரமாக ஆதரிப்போம் என்றுமாநிலஅவை உறுப்பினர்மேலும் கூறியுள்ளார்.

வெளிப்படையாக, ரஷ்யா திரான்ஸ்னிஸ்ட்ரியா பிராந்தியத்தை திறந்தகரங்களுடன் ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் முகத்தில் மற்றொரு இறுக்கமான அறையாக கூட இருக்கலாம்.

ன்மனைவியும், பெண் குழந்தையும் உயிரிழந்தனர். அவருடைய இளம் வயது மகன்கள் இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றனர். இவ்விபத்து ஏற்படுத்திய வலியிலிருந்து மெதுவாக மீண்டு வந்த ஜோ பைடன் அரசியல் பயணத்திலும் சிறிது சிறிதாக முன்னேறத் தொடங்கினார்.

செனட்டராக இருந்தவர், 2008, 2012 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அதிபர்பராக் ஒபாமாவின் அரசில் அமெரிக்கத் துணை அதிபராகத் தேர்வு செய்யப்படும் அளவுக்கு உயர்ந்தார். இந்நிலையில் ஜோ பைடனின் முதல் மகன் ஜோசப் பியூ, புற்றுநோயால் 2015-ஆம் வருடம் உயிரிழந்தது அவருக்கு பேரிடியாக அமைந்தது. 1988 -ஆம் வருடத்திலேயே ஜனநாயகக் கட்சியின் அதிபர்வேட்பாளராகக் களம் இறங்கிய ஜோ பைடனின் பிரசார உரை வேறு சிலருடைய உரைகளைத் தழுவியிருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்ததால், அதிபர்பதவிக்கான போட்டியிலிருந்து அவர்விலகவேண்டியதாயிற்று. அதேபோன்று, 2008-ஆம் ஆண்டிலும் அதிபர்வேட்பாளராக விரும்பிய அவருக்கு, கட்சியினரின் ஆதரவு போதிய அளவில் கிடைக்காததால், பராக் ஒபாமாவின் அரசில் கிடைத்த துணை அதிபர்பதவியுடன் அவர்திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

பின்னர்ஒருவழியாக 2019- இல் ஜனநாயகக் கட்சியின் அதிபர்வேட்பாளராகத் தேர்வு செய்யப்பட்டு, தேர்தலிலும் வென்று அமெரிக்கஅதிபராகப்பதவியேற்றுக்கொண்டார். தற்பொழுது மீண்டும் அதிபர்பதவிக்கான போட்டியாளராகக் கட்சியினரால் தேர்வு பெற்றுள்ள ஜோ பைடன், மறுபடியும் டொனால்ட் டிரம்ப்பைஎதிர்கொள்ள இருக்கிறார். முன்னாள் அமெரிக்க அதிபர்டொனால்டு டிரம்ப்பின் அரசியல் சாகசங்கள் ஒரு தனி ரகம். 2016-ஆம் வருடம் நடந்த அமெரிக்க அதிபர்தேர்தலில் முன்னாள் அதிபர்பில் கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டனே வெற்றி பெறுவார்என்று உலகமே எதிர்பார்த்த நிலையில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அத்தேர்தலில் ரஷியஅதிபர்புதினின்தலையீடுஇருந்ததாகவும் கூறப்பட்டது.

பதவியேற்ற சில நாட்களிலேயே நிர்வாகத் தில் அதிரடி நடவடிக்கைகளைத் தொடங்கிய டிரம்ப், இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குவருவதைக்கட்டுப்படுத்தவும், வெளிநாட்டவர்அமெரிக்காவிற்குள் நுழைவ தைத்தடுக்கமெக்ஸிகோஎல்லையில்தடுப்புச்சு வர்எழுப்பவும் உத்தரவு பிறப்பித்தார். இவரது காலத்தில்வடகொரியஅதிபருடனானராஜதந்திர உறவு மோசமடைந்ததுடன், ஒரு தருணத்தில் அணு ஆயுதப் போர்மூளுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. ஜார்ஜ் ஃப்ளாயிடு என்ற ஆப்பிரிக்க - அமெரிக்க இளைஞர்கொல்லப்பட்டத்தைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் கலவரம் கிளர்ந்தெழுந்தது. அச்சமயம் அதிபர்டிரம்ப் வெளியிட்ட அறிக்கை நீதி கேட்டுப் போரடியவர்களை மேலும் சினமூட்டுவதாக அமைந்தது.

இது மட்டுமா? 2020-ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர்தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்ற நிலையில், டிரம்ப் தம்முடைய தோல்வியை எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. எப்படியாவது தேர்தல் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என முனைந்ததுடன், தம்முடைய ஆதராவாளர்களைத் திரட்டி அமெரிக்க நாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டு, ஜோ பைடனின் பதவியேற்பைத் தடுக்கவும் முயன்றார். தம்முடைய நடவடிக்கைகளின் மூலம் உள்நாட்டிலும், உலக அளவிலும் பரவலான எதிர்ப்புகளை சம்பாதித்த டொனால்ட் டிரம்ப் மீண்டும் அதிபர்தேர்தலுக்கான வேட்பாளராவார்என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனாலும், மிகவும் நம்பிகையுடன் இருந்தார்டிரம்ப்.

இடைப்பட்டகாலத்தில்சிலவழக்குகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்த டிரம்ப், இந்திய அமெரிக்கராகியவிவேக்ராமசாமி, நிக்கிஹாலே ஆகியோருடைய கடுமையான போட்டிகளை சமாளித்து அதிபர்வேட்பாளராகியிருப்பது பலரது புருவங்களையும் உயர்த்தியுள்ளது. பைடன், டிரம்ப் ஆகிய இருவரிடையிலும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசங்கள் இருந்தாலும், அரசியலில் உச்சத்தைத் தொடுவதைக் குறித்த உத்வேகத்திலும், எதிர்மறையான சூழ்நிலைகளையும் மீறி அந்த உச்சத்தை அடைந்து விடலாம் என்ற தன்னம்பிக்கையிலும் இவர்கள் இருவரும் சமமாகவே இருக்கிறார்கள்.

இவ்வருடத்திய அமெரிக்க அதிபர்தேர்தலில் பைடன், டிரம்ப் ஆகிய இருவரில் வெற்றி பெறப்போவது யாராக இருப்பினும், இவ்விருவருமே தளராத தன்னம்பிக்கைக்கு உதாரணமாய்த் திகழ்கின்றனர்என்பதில் ஐயமில்லை.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cococola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=

# வருமான ஏற்றத்தாழ்வ வைத்து இளைஞர்களை தவறானமுறையில் சிலர் வழி நடத்துகிறார்கள்

## சந்திப்பில் எஸ்.எம்.சபீஸ் தெரிவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

குறைந்த வருமானம் கொண்ட அல்லது வருமானம் இல்லாத கிராம மட்ட இளைஞர்களை இனவாதிகள் தமக்கு ஏற்ற வகையில்கலவரங்களைத்தூண்டவும்பெரும் சேதங்களை ஏற்படுத்தவும் பயன்படுத்திக் கொள்கின்றனர் என மத்தியமுகாம் இளைஞர்களுடனான சந்திப்பின் போது அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

கிழக்கின் கேடயம் மத்தியமுகாம் கிளை கூட்டம்நேற்று(ஞாயிற்றுக்கிழமை)இடம்பெற்ற போது அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும்அங்குஉரையாற்றியஅவர்-

வளர்ச்சி அடைந்த நாடுகளில் சராசரி வருமானம் சீராக இருப்பதாலும், வருமான ஏற்றத்தாழ்வு இல்லாமையாலும் அங்கு இனக்கலவரங்கள் மிகவும் குறைவாகும். அதேநேரம்நாளைசெலவுக்குஎன்னசெய்வது என்றபிரச்சினைகள்அங்கேஇல்லாமையால் மற்றவர்களைப்பற்றிசிந்திக்காமல்அவர்களது வாழ்வியல் தொடர்பில் மாத்திரமே மக்கள் கவனம் செலுத்துகின்றனர்.

ஆனால்எமதுநாட்டில்தலாவீதவருமானம் இன்மையால் இளைஞர்களைத்தமக்குஏற்ற வகையில்கலவரங்களைத்தூண்டுவதற்கும் தகாத வேலைகளில் ஈடுபடுவதற்கும் பயன்படுத்துகின்றனர்.

இந்நிலைமாறவேண்டுமானால்வருமான ஏற்றத்தாழ்வு களையப்படவேண்டும். அதற்கு இளைஞர்கள் புதிய தொழில்களை உருவாக்குபவர்களாக மாறி பலருக்கு தொழில் வழங்குநர்களாக உருவெடுக்க வேண்டும். அதற்கு அரசில் சிந்தனை ஆக்கம் கொண்டவர்கள் உள்வாங்கப்பட வேண்டும். அதன் மூலம் எமது சமூகம் வளம் பெறும் என அங்கு உரையாற்றும் போது தெரிவித்தார்.(05)

# பாடசாலை மாணவர்களுடன் இளங்கலை பட்டதாரிகள் சிநேகபூர்வச் சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் 2024ஃ25 ஆம் கல்வியாண்டுக்கான (க.பொ.த) சாதாரண தர புதிய வகுப்பு ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒரு பொறுப்பானஅமைப்பாக,இளங்கலை பட்டதாரிகள்அமைப்புஇலவசமேலதிக வகுப்புகள்மற்றும்கருத்தரங்குகளை ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது.

மாணவர்களுக்கு உண்மையில் என்னவகையானகல்வித்தேவைகள் உள்ளன என்பதை கண்டறிய, மாணவர்களுடன் நேரடியான நட்புரீதியானகலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டு அமைப்பின் தற்போதய தலைவர்ஏ.ஜி.எம்.இக்லாஸ்களத்திற்கு நேரடியாக சென்று மாணவர்களுடன் உரையாடினார்.

மாணவர்களுக்குகல்விஉதவிகள் மிகவும் தேவைப்படுவதாகவும் மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே, தன்னார்வலர்களின் பங்களிப்புடன்அவர்களுக்குதன்னால் இயன்ற அளவு கல்வி ரீதியாக உதவ முடியும் என்று அது நம்புகிறது.

அதனடிப்படையில் அனைத்து பாடங்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களை சுழற்சி முறையில் நியமித்து தொடர்ச்சியான வகுப்புக்களை பாடசாலை சமூகத்தின் பூரண ஒத்துழைப்புடன் நடத்த அந்த அமைப்பு திட்டமிட்டுள்ளது. (05)

# கிண்ணியா அல் மினாவில் வருடாந்த பரிசளிப்பு விழா



கிண்ணியாவலயக்கல்விஅலுவலகத்துக்குட்பட்ட கிண்ணியா பூவரசந்தீவு அல்மினா மஹா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா வித்யாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும்,க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த பல்கலைக்கழகம் தெரிவான மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.


அத்துடன்ஐந்தாம்தரபுலமைபரிசில்பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களையும் வகுப்பு ரீதியாக முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டிக் கௌரவிப்பும் இடம் பெற்றது.

கடந்த காலங்களில் இப்பாடசாலையில் கடமையாற்றி வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற சென்ற ஆசிரியர்களையும் அவர்களது சேவையையும் பாராட்டி கௌரவிப்பும் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.வை ஹதியத்துல்லா தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான உதவிப்பணிப்பாளர் செய்யது அஹ்மது, பாடசாலை அபிவிருத்தி மேம்பாட்டு இணைப்பாளர் ஏ.ஆர் ஹஸ்ஸாலி, பாடசாலை அபிவிருத்தி செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்









4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## எந்தத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படப்போகின்றது என்றே கேட்கின்றேன். கடந்த வரும் மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தேர்தல் பிற்போடப்பட்டு ஒருவருடத்துக்கு மேலாகின்றது.

இது தொடர்பில் எவரும் வினவுவதில்லை. சிறிய விடயத்தினை செய்யாதிருந்தால் அதற்கடுத்துள்ள பெரிய விடயங்களையும் செய்யாமலேயே இருக்க முடியும். பணம் இல்லாமையினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த முடியாது என்றார்கள். தற்போது நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும் வரையில் காத்திருக்கின்றார்கள்.

தேர்தல் அதிகாரிகள் இது தொடர்பில் ஆராய்வதில்லை. தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களில் ஓரிருவர் மாத்திரமே பேசுகின்றனர். ஏனையவர்கள் கதைப்பதில்லை. அரசியல் கட்சிகள் கதைப்பதில்லை.

தேர்தல் எப்போது என்ற கேள்விக்கு அப்பால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எப்போது என்பதே எமது கேள்வியாகும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. அதனை செப்டெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நடத்தியாக வேண்டும். ஆனால் அதற்கு முன்னதாக எந்தவொரு தேர்தலையும் பிற்போடுவது தவறு என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இரண்டு தேர்தல்களை நடத்த முடியும் என்று அமைச்சரவையில் கூறப்பட்டுள்ளதல்லவா?

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதியை ஒதுக்கீடு செய்யாது விட்டாலும், அவசர நிலைமைகளின் பேரில் நிதியத்திலிருந்து நிதியைப் பெற முடியும். அதுபோன்றே ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி உள்ளூராட்சி தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும்.

2020ஆம் ஆண்டு பொது ஜன பெரமுனவக்கு 146 ஆசனங்கள் கிடைத்தன. மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஆட்சியை பொறுப்பேற்றார்கள். அப்போது கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தார். ஆனால் தற்போது இருவரும் இல்லை. ஆகவே மக்கள் ஆணை அற்ற நிலைமையே உருவாகியுள்ளது. இதனால் நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல், ஜனாதிபதி தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய அனைத்தும் நடத்தப்படவேண்டும்.

முடிந்தால் சட்டத்தினை மீளத்திருத்தி மாகாணசபைகளுக்கான தேர்தலையும் நடத்தவேண்டும். இந்தத் தேர்தல்களை 2025இற்குள் நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். தேர்தல் தொடர்பில் செயற்பட்ட அதிகாரி என்றவகையிலும், தேர்தல்கள் தொழில் வல்லுணர்கள் சங்கத்தின் தலைவர் என்றவகையிலும் நான் ஒரு விடயத்தில் உறுதியாக இருக்கின்றேன்.

கிராமத்தில் நடைபெறம் கூட்டுறவு சங்கத் தேர்தல் முதல் எந்தத் தேர்தலையும் பிற்போடுவதற்கு இடமளிக்கக் கூடாது. நான் ஆணைக்குழுவின் தவிசாளராக இருந்தபோது தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் தேர்தல்கள் திணைக்களத்தினை சுற்றிவளைத்தார்கள். மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினார்கள். ஆனால் இன்று அவர்களாலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிற்போடப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. ஆனால் ஆளும் தரப்பில் இருப்பவர்கள் அதுபற்றி அமைதியாகவே உள்ளனர். எதிர்க்கட்சியில் பேசுவது ஆளும் கட்சிக்குச் சென்றவுடன் மறப்பது எவ்வாறு என்ற கேள்வி எழுகின்றது என்றார்.

## குழவரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமரத்ன தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.




# மடத்தடி மீனாட்சியம்மன் ஆலய மகா சங்காபிஷேக நிகழ்வுகள்









(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வு சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலயகுரு சிவஸ்ரீ ஹோவர்த்தன சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9.00 மணி முதல் சங்காபிஷேக கிரியைகள் நடைபெற்றன.

முன்னதாக ஆலய பரிபாலன சபையின் தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் முன்னிலையில் சிவலிங்க அபிஷேகம் இடம்பெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ,

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன்,

ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் , வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், ஆலய பரிபாலன சபை ஆலோசகர், உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் ஆயிரம் அடியார்கள் கலந்து கொண்டார்கள்.

மரகதம் நூல் வெளியீடும் அன்னதானமும் இடம்பெற்றன.(05)

# அகில இலங்கை வை.எம்.எச்.ஏ. பேரவையின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(நூருல் ஹுதா உமர்)

அகில இலங்கை வைஎம்எச்ஏ பேரவையின் ஏற்பாட்டில் பொத்துவில் அக்ஃஅஸ் -ஸாதிக் வித்தியாலய மாணவர்கள் 450 பேருக்கு



சனிக்கிழமை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ.சி. சிஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை வைஎம்எச்ஏ பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தரம் ஒன்று முதல் ஐந்து வரையான மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட வைஎம்எச்ஏகளின் ஒன்றியச் செயலாளரும், வைஎம்எச்ஏ பாலமுனை தலைவருமான ஐ. அஹமட் ஸிறாஜ், சிவேட் சிறிலங்கா தலைவர் எஸ்.எல்.எம். அப்துல் காதர், லங்கா தமிழ் பிரதானி ஆசிரியர் பௌசான் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை வைஎம்எச்ஏ பேரவையின் அனர்த்த பிரிவின் ஏற்பாட்டில் இப்பாடசாலையின் கல்வி கற்கும் 450

மாணவர்களுக்கு இந்தக் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரியில் சிறுவர் உளவியல் குறித்த கருத்தமர்வு



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரியின் மாணவர் சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கிவரும் இம்முன்பள்ளி, தமது 10 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் புதிய சீருடை மற்றும் மாணவர் அடையாள அட்டைகள் சாதாரணதர, உயர்தர பிரிவுகளில் கல்வி பயிலும் 183 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தாய் சேய் நலன் பேணல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின் கௌரவ அதிதியாவும் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஏ.ஆர்.றிஸ்வான் முகம்மட், கல்முனை பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஆயிஷா மற்றும் கல்முனை மெற்ரோபொலிட்டன் கல்லூரியின் கணக்காளர் எஸ்.லியாக்கத் அலி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



இதன்போது 'சிறுவர் உளவியல்' எனும் தலைப்பில் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் 'சிறுவர் போசாக்கு' தலைப்பில் டொக்டர் எம்.எச். றிஸ்பின், 'முன்பள்ளி கல்வியில் பெற்றோரின் வகிபாகம்' தலைப்பில் ஏ.எம்.ஆயிஷா, 'சேமிப்பின் முக்கியத்துவம்' தலைப்பில் ஏ.ஆர். றிஸ்வான் முகம்மட் ஆகியோரால் பெற்றோருக்கான விழிப்புணர்வு உரைகளும் இடம்பெற்றமை விஷேட அம்சமாகும்.(05)

# தமிழரசுக் கட்சி ஒற்றுமை எதனாலும் குறையாதாம்

## மட்டு. மாவட்டக் கூட்டத்தில் திடசங்கற்பம்



எமது தமிழரசுக்கட்சியினர் என்றும் ஒற்றுமையாக செயற்பட்டு தந்தை செல்வாவின் வழியில் எமது மக்களுக்கான பயணத்தை தொடர்வார்கள். உட்கட்சி மோதல்கள் எமது மக்களுக்கான குறிக்கோள்கள் கொள்கைகளை சிதைப்பதில்லை. நாம் இன்னும் வலுப்பெற்றுள்ளோம். ஒரு குடும்பத்தில் மனஸ்தாபங்கள் சிறு சிறு சண்டைகள் வருவது இயல்பு. ஆனால் அவை தீரும் போது வரும் ஒற்றுமை மற்றும் நம்பிக்கை உறுதி தற்போது எமக்கும் ஏற்பட்டுள்ளது. நாம் என்றும் எம் மக்களுக்காக.

மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட கிளை தலைவரான சாணக்கியன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் குறித்து பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்ற நிலையில் கட்சியினை ஒற்றுமையுடன் முன் கொண்டுசெல்வதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் போது தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட கிளை கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து ஓரணியில் செயற்பட தீர்மானித்ததுடன், தேசிய ரீதியில் தமிழரசுக் கட்சிக்குள் எழுந்துள்ள செயலாளர் தெரிவு உள்ளிட்ட சில உட்கட்சி பிரச்சினைகளை தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை கூட்டங்கள் நடைபெறும் போது அங்கு பேசி தீர்மானிக்கவும் மாவட்ட கிளை என்ற அடிப்படையில் அனைத்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்களும் ஓரணியில் திரண்டு ஒற்றுமையுடன் செயற்படுவோம். எதிர்வரும் காலங்களில் நடைபெற உள்ள தமிழரசுக் கட்சியின் தலைவர் தந்தை செல்வாவின் பிறந்தநாள் நிகழ்வுகள் மற்றும் நடைபெற உள்ள இதர நிகழ்வுகளில் அடிப்படையில் புது உத்வேகத்துடன் செயற்பட உள்ளோம்.

தமிழர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்ற கட்சி என்ற வகையில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தமிழரசுக் கட்சிக்கான ஆதரவை வழங்கி வரும் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களை தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதனை உறுதிப்படுத்துவோம். - என்றார்.(05)

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் ஒரு வாரமாக சேவைகள் இடைநிறுத்தம்!

(எஸ்.கார்த்திகேசு)

அம்பாறை திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிபகிஸ்கரிப்பு காரணமாக கடந்த திங்கட்கிழமை முதல் எந்தவொரு வைத்திய சேவைகளும் இடம்பெறாது இடைநிறுத்தப்பட்டுள்ளன. நோயாளிகள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் திருக்கோவில் பிரதேச நோயாளிகள் மருத்துவ தேவைகளுக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு சென்று வருவதாக விசனம் தெரிவித்துள்ளதுடன் அரச வைத்தியர் சங்கத்தினர் நோயாளிகளின் மீது கருணை கொண்டு மீண்டும் வைத்தியசாலையில் வைத்திய சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் மற்றும் வைத்தியசாலையின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரிடம் வினவியபோது இதனை அவர்கள் உறுப்படுத்தி இருந்தனர்.

திருக்கோவிலிலில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிர் இழந்ததைத் தொடர்ந்து திருக்கோவில் ஆதார வைத்தியசாலை மருத்துவர்களின் அசமந்த போக்கே காரணம்எனத்தெரிவித்துகடந்ததிங்கட்கிழமைகாலை 10 முதல் மாலை 5 மணிவரை பிரதான வீதியை மறித்து மாணவர்கள், பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இருந்ததுடன் வைத்தியசாலையில் பெயர் பலகை மற்றும் வைத்தியசாலையின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு இருந்தன.

இதனைத் தொடர்ந்து வைத்தியர்கள் தமக்கு பாதுகாப்பு இல்லையெனத் தெரிவித்து அவர்கள் தொடர்ந்து ஒரு வாரமாக பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு வருதுடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார், திருக்கோவில் வலயக் கல்வி அலுவலம் மற்றும் சுகாதார துறையினர் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் இன்றுவரை திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் எந்தவொரு பிரிவிலும் வைத்திய சேவைகள் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொது மக்கள் நம்பியுள்ள ஒரே ஒரு வைத்தியசாலை இதுவாகும். தற்போது வைத்தியசாலை இயங்காத நிலையில் வயோதிபர்கள் சிறுவர்கள் தொடர்ச்சியாக மருத்துவ சிகிச்சைகளைப் பெற்ற வந்தவர்கள் என அனைவரும் மிகவும் சிரமத்துக்கு மத்தியில் பெரும் தொகை பணத்தை செலவு செலவு செய்து தொடர்ச்சியாக செல்லமுடியாதுள்ளதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாம்புக்கடி மற்றும் அவசர நோய் காரணமாக வைத்திசாலைக்கு கொண்டு வரப்பட்ட போதிலும் அவர்கள் அனைவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மக்களின் உயிர்களுடன்விளையாடாதுசம்பந்தப்பட்டதரப்பினர் துரிதமாகநடவடிக்கைகளைமுன்னெடுத்துஎமக்கான வைத்திய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவவுமாறு நோயாளிகள், சமூக ஆர்வளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)

# மட்டுவில் திருச்செல்வம் கொழும்பில் சாதனை

சாவகச்சேரி - மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்த 60 வயதான உலகசாதனையாளர் செ.திருச்செல்வம் எதிர்வரும் 24-03 ஞாயிற்றுக்கிழமை காலிமுகத்திடலில் புதிய உலக சாதனை ஒன்றை நிலைநாட்டவுள்ளார்.

தாடி மற்றும் தலைமுடியால் கனரக வாகனத்தை இழுத்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் தனது மூன்றாவது உலக சாதனையை பதிவு செய்யும் பொருட்டு இந்த சாகசத்தை முன்னெடுக்கவுள்ளார்.

24-03ஞாயிற்றுக்கிழமைகாலை10 மணிக்குகாலிமுகத்திடல்தாஜ்சமுத்திரா ஹோட்டல் முன்பாக மேற்படி உலக சாதனை முயற்சி இடம்பெறவுள்ளது.

உலகசாதனையாளர்திருச்செல்வம் இதற்கு முன்னர் தனது தலைமுடியின் உதவியுடன்1500கிலோஎடைகொண்ட வாகனத்தை 1500 மீற்றர் தூரம் இழுத்து உலக சாதனை படைத்ததுடன் - 1500 கிலோ எடை கொண்ட வாகனத்தைதனதுதாடியின்உதவியால் பின்புறமாக400மீற்றர்தூரம்இழுத்தும் சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

(05)

# கிண்ணியாவை அடையாளப்படுத்தும் எல்லையின் பெயர்ப் பலகை மாயம்!

(ஹஸ்பர் ஏ.எச்).

கிண்ணியா தம்பலகாமம் பிரதான வீதியின் தம்பலகாமத்துக்கு அடுத்ததாக காணப்படும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக வைக்கப்பட்ட கிண் ணியா எனும் பெயர் பலகையை பல மாதங்களாக காணவில்லை .சிவத்தப்பாலத்தடியில் நடப்பட்டிருந்த குறித்த பெயர்ப் பலகை இன்மையால் கிண்ணியா எனும் பிரதேச செயலகப் பகுதியை எடுத்துக்காட்டும் பெயர் இன்மையால் பாதசாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக நடப்பட்ட குறித்த பெயர் பலகை பல மாத காலமாக காணாமல் போயுள்ளது. இது தொடர்பில் உரிய சபைஇதுவரைக்கும்அதனைமீண்டும் நட நடவடிக்கை எடுக்கத் தவறியமை ஏனோ தெரியவில்லை. இது தவிர புதிதாக அமைக்கப்பட்ட பல காப்பெற் வீதிகளுக்கான முறையான பெயர் பலகையும் அமைக்கப்படவில்லை. இதனால்வெளிமாவட்டங்களில்இருந்து வரும் பாதசாரிகள் வீதியை தேடியும் அங்கும் இங்கும் அலைகின்றனர்.

எனவேஇதுதொடர்பில்உரியசபை நடவடிக்கை எடுத்து வீதிகளுக்கான பெயர் பலகைகளை நடுமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

(05)

# தலைக்கவசம் அணியாது மோ. சைக்கிளை செலுத்திய இளைஞன் விபத்தில் உயிரிழப்பு

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்று விபத்தில் இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பளைப் பகுதியை 21 வயதுடைய இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தலைக்கவசம் அணியாத நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்தி விபத்துக்குள்ளானதால் தான் தலையில் படுகாயம் ஏற்பட்டது என மரண விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. (05)

# திருகோணமலையில் மகளிர் தின சிறப்பு கலை, இலக்கிய நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகம் மற்றும் பொது நூலகத்தின் வாசகர் வட்டம் இனைந்த ஏற்பாட்டில் மாதாந்த கலை, இலக்கிய நகராட்சி மன்றத்தின் பெண் சுத்திகரிப்பு தொழிலாளிகள் சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

கவிஞர் கலாநிதி செ.ஞானராசா



நிகழ்வின் வரிசையில் மகளிர் தின சிறப்பு கலை, இலக்கிய நிகழ்வு ஜமாலியா சனசமூக நிலையத்தின் அனுசரணையில் சனிக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு, வாசகர் வட்டத்தின் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில், கவிஞர்களான கொட்டிய ஆரன், திருமதி ஜெயசிறி சிறிசெல்வம், டி.இரவிகாந்தன், செல்வி பாத்திமா தாஹிரா முஹம்மது சித்தீக் ஆகியோர் கலந்து கொண்டு 'நிகரென்று கொட்டு முரசு' என்ற தலைப்பில் கவிபாடியிருந்தனர்.



தலைவர் சரவணபவானந்தம் திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகர், சிறப்பு விருந்தினராக சனசமூக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன் கௌரவ விருந்தினர்களாக ஜமாலியா சனசமூக நிலையத்தின் தலைவர் என்.நூர் மொஹமட், செயலாளர் மு.மு.முஹமட் முக்தார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், திருகோணமலை இந்நிகழ்வினை வாசகர் வட்டத்தின் ஆலோசகரும் நூலக உதவியாளருமான அ.அச்சுதன் தொகுத்து வழங்கியிருந்ததுடன், வரவேற்புரையை நூலகர் மு.லை.றிம்சானா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்விற்கு, அரங்கு நிறைந்த பார்வையாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# யாழில் மாடு இறைச்சியாக்கிய குற்றம்; ஒருவரைக் கைதுசெய்ய நடவடிக்கை

சட்டவிரோதமான முறையில் மாட்டை இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வடமராட்சி புலோலி பகுதியில் வீடொன்றில் வைத்து சட்டவிரோதமான முறையில் மாடொன்று இறைச்சியாக்கபடுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், குறித்த வீட்டுக்கு பொலிஸார் விரைந்திருந்தனர்.

பொலிஸாரை கண்டதும் மாட்டை இறைச்சியாக்கி கொண்டிருந்த நபர் வீட்டிலிருந்து தப்பிச்சென்றுள்ளார். அதனை அடுத்து இறைச்சியை மீட்ட பொலிஸார் , வீட்டின் உரிமையாளரான தப்பியோடியவரின் தாயாரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரை விசாரணைகளின் பின்னர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் ஆஜபடுத்தியபோது , அவரை செவ்வாய்க்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை தப்பியோடிய நபர் , முன்னாள் பொலிஸ் உத்தியோகஸ்தர் எனவும் , பொலிஸ் உத்தியோகஸ்தராக கடமையாற்றிய கால பகுதியில் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய குற்றச்சாட்டில் பணியிடை நீக்கம் செய்யப்பட்டவர்; என பொலிஸார் தெரிவித்த னர். (05)

# கிண்ணியா அல் - இர்பான் வித்திக்கு தௌபீக் விஜயம்;





(எஸ். சினீஸ் கான்)



கிண்ணியாஅல்-இர்பான்மகாவித்தியாலயத்திற்கு ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் விஜயம் செய்தார்.

இதன்போது, பாடசாலையின் தேவைகள் குறித்து அதிபர், ஆசிரியர், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன் சில பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வுகளும் எட்டப் பட்டது. (05)

# அநுராதபுரம் பாடசாலை மாணவர்கள் குறித்து வெளியான அதிர்ச்சித் தகவல்

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களில் 28 சத வீதமானவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தாமல் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜயந்த பெனாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 16 சத வீதமான பாடசாலை மாணவர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பிரித்தானிய வைத்திய அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் பெரும்பாலான மாணவர்கள் அநுராதபுரம் பிரதேசத்தில் வசிப்பவர்கள் என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதாரப் பிரச்சினையால் குடும்பங்களில் ஏற்படும் வருமானமின்மையே இதற்கு முக்கிய காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை மாணவர்களின் சுறுசுறுப்புத் தன்மையும் குறைவடைந்து வருவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# அடையாளம் காணாத முதியவரின் சடலம்: வைத்தியசாலை நிர்வாகம் உதவி கோரல்



நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத நிலையில் பிரேத அறையில் முதியவரின் சடலமொன்று வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நானுஓயா சுரங்கப்பாதைக்கு அருகில் பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு அதே ரயிலில் எடுத்துச் செல்லப்பட்டு தலவாக்கலை புகையிரத நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் நானுஓயா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது .

முதியவரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் உயிரிழந்தவர் 55 முதல் 65 வயதுக்கு இடைப்பட்டவர் எனவும், 5 அடி 1 அங்குல உயரம் கொண்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பச்சை நிற சட்டையும் கறுப்பு நிற நீண்ட காற்சட்டையும் அணிந்துள்ளார் எனவும் அதில் 4,000 ரூபா பணமும் இருந்ததாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ள சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை நிர்வாகம் பொதுமக்களை வேண்டிக் கொண்டுள்ளது. (05)

# கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் கொலை : மூன்று பெண்கள் உட்பட நால்வர் கைது

மாத்தறை - மிரிஸ்ஸ பிரதேசத்தில் இரண்டு சுற்றுலா விடுதிகளை நடத்திச் செல்லும் இரு தரப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில், நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 3 பெண்கள் உட்பட 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்ஹவத்த பிரதேசத்தை சேர்ந்த 18 வயதுடைய நபரொருவரும் 18, 40 மற்றும் 55 வயதுடைய மூன்று பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த கொலை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் அவர்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மரம் ஒன்றை வெட்டியது தொடர்பில் ஏற்பட்ட தகராறு எல்லை மீறியதில் சனிக்கிழமை காலை இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

இவ்வாறு உயிரிழந்தவர் மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபராவார்.

இவர் 'மாகந்துரே மதுஷ்கே' என்பவரின் உதவியாளரான 'சன்ஷைன் சுத்தா'வின் நண்பர் என பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# கடலில் நீராட சென்ற சிறுமி பரிதாபச் சாவு

## சாட்டியில் சனியன்று சம்பவம்

யாழ்ப்பாணம் – சாட்டி கடலுக்குள் நீராடச் சென்ற சிறுமியொருவர் நீரில் மூழ்கி சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுமி அவரது நண்பியுடன் நீராடிக்கொண்டிருக்கும் போது நீரில் அடித்து செல்லப்பட்டார்.

இதன்போது அவரது நண்பி சத்தமிட்ட வேளை அங்கிருந்தவர்கள் சிறுமியை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

(05)

# சுகாதார சீர்கேட்டுடன் வெதுப்பகம்: வல்வெட்டித்துறையில் சீல் வைப்பு

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகம் ஒன்றுக்கு நீதிமன்ற உத்தரவில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரமற்ற முறையில் உற்பத்திகளை களஞ்சியப்படுத்தியமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த பொது சுகாதார பரிசோதகர், வெதுப்பகத்திற்கு சீல் வைக்க கட்டளையிடக் கோரி விண்ணப்பம் செய்துள்ளார் .

விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிமன்றம் வெதுப்பகத்தில் திருத்த வேலைகளை முடித்து , சுகாதார பரிசோதகர் அதனை உறுதிப்படுத்தும் வரையில் வெதுப்பகத்துக்கு சீல் வைக்க உத்தரவிட்டுள்ளது. (05)

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் சாவு

காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி குடும்பஸ்த்தர் ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) உயிரிழந்துள்ளார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குளத்துவெட்டை திகிலிவெட்டையில் பகுதியில் வசிக்கும் 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வழக்கம் போல் மீன் பிடி தொழிலுக்கு சென்றவர் குளத்தில் மீன் பிடிப்பதற்காக கட்டு வலையைக் கட்டிவிட்டு அங்கிருந்த கட்டிலில் உறங்கி கொண்டிருந்த வேளை காட்டு யானை அவரை தாக்கியுள்ளது.

இதனால் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்துள்ளதுடன் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(05)




# தேசிய சம்மேளன பிரதிநிதி தெரிவு



தேசிய இளைஞர் சேவைகள் மண்றத்தின் 2024/2025 வருடத்திற்கான தேசிய சம்மேளனத்திற்கான பிரதிநிதியாக மூதூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த எஸ்.எச். சிஜான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் இருவரை தெரிவு செய்வதற்கான தேர்தல் சனிக்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

11 பிரதேச செயலக பிரிவுகளிலும் இருந்து 66 பிரதேச சம்மேளன பிரதிநிதிகள் வாக்கெடுப்பில் கலந்துகொண்டு வாக்களித்தனர். 28 வாக்குகளை பெற்று எஸ்.எச்.சிஜான் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த10 வருடம்களுக்கு பின்னர் இம்முறை மூதூருக்கு இத் தேசிய சம்மேளன பிரதிநிதி கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2024இல் வெளியிடப்பெற்றது